## ஆசிரியர் பணி நியமனம் குறித்து பொது மக்களுக்கு ஓர் அறிவிப்பு

செ. வெ. 476 நாள் 24-6-08

தற்போதுள்ள அரசு பொறுப்பேற்றவுடன் ஆசிரியர்கள் நியமனங்களை வேலை வாய்ப்பக பதிவு மூப்பின் அடிப்படையில் நியமனம் செய்வது என்று முடிவு எடுத்து, அதன் அடிப்படையிலேயே ஆசிரியர்களைத் தெரிவு செய்து வந்தது. அவ்வாறு தெரிவு செய்யும்போது, வேலை வாய்ப்பகத்திலிருந்து ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு 1:1 என்ற விகிதாசாரத்தில் பணி நாடுநர்களின் பட்டியல் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்படும்போது ஏராளமான பணி நாடுநர்கள், சான்றிதழ் சரிபார்த்தலுக்கு வருகை அளிக்காத நிலை இருந்து வந்தது. இதனால் உரிய காலத்தில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களையும் பூர்த்தி செய்வதில், சற்று காலதாமதம் ஏற்பட்டது. இக்காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு வேலை வாய்ப்பகத்தில் பணி நாடுநர் பட்டியல் 1:5 என பெறப்பட்டு, சான்றிதழ் சரி பார்த்தல் பணி நடைபெறுகிறது. 1:5 விகிதத்தில் பட்டியல் பெறப்பட்டாலும், பணி நியமனம் முற்றிலும் வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையிலேயே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் பதிவு மூப்பின் அடிப்படையில் முதுகலை ஆசிரியர்கள் 1621 நபர்களும், பட்டதாரி ஆசிரியர்கள் 3107 நபர்களும், தமிழாசிரியர்கள் 360 நபர்களும், இதர ஆசிரியர்கள் 1313 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பின் அடிப்படையில்தான் ஆசிரியர் நியமனங்கள் நடைபெறுகின்றது, வேறு நபர்கள் யாரேனும், தாங்கள் சிபாரிசு செய்து ஆசிரியர் நியமனம் பெற்றுத் தருகிறோம் என்று கூறினால், ஏமாற வேண்டாமென பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9